Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 264

திங்கட்கிழமை
18 ஒகஸ்ட் 2025

ஆவணி 02 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## வீடு புகுந்து திருட்டு; இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக.18
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கத்தானை, மடத்தடியிலுள்ள வீடொன்றில் நடந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

☞ 11

# இலங்கையை இன்னமும் கண்காணிப்பது அவசியம்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

**கொழும்பு, ஓகஸ்ட் 18**

**இலங்கையில் மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுத்த கட்டமைப்பு ரீதியான காரணிகள் இன்றும் தொடர்வதை ஐக்கிய நாடுகள் சபையின் சமீபத்திய மனித உரிமைகள் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் அவசியத்தை இந்த அறிக்கை மீண்டும் உறுதிப்படுத்துகின்றது.**

☞ 11

## புதிய விடயங்களை உள்ளடக்கி ஜெனிவாவில் வரவுள்ள பிரேரணை!

கொழும்பு, ஓக.18
ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகளால் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்படவுள்ள புதிய பிரேரணையில் புதிய அரசமைப்பு

☞ 09

## நாடாளுமன்றத்துக்குள்ளும் ஊழல் விசாரணை ஆரம்பம்

*ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள முன்னாள் அமைச்சர்கள் 20 பேருக்கு எதிராக நாடாளுமன்றத்துக்குள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது ஊழல் விசாரணை ஆணைக் குழு.*

**விரிவு பக்கம்:- 07**

## தற்காலிகத் தீர்வுகளை திணிக்க முயலாதீர்கள்

*மன்னார் காற்றாலைத் திட்டம் தொடர்பில் தற்காலிகத் தீர்வுகளைத் திணிக்க முயலவேண்டாம் என்று, காற்றாலை மின் திட்டத்துக்கு எதிராகக் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.*

**விரிவு பக்கம்:- 02**

மூன்றாம் தவணைக்காக

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஓக.18
பாடசாலைகளின் மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகின்றன.
அரசமற்றும் அரச அனுமதி பெற்ற பாடசாலைகளின் 2025ஆம் ஆண்டின் இரண்டாவது பாடசாலைத்

☞ 11

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதே அரசின் எதிர்பார்ப்பு

அமைச்சர் பிமல் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.18
பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அந்தச் சட்டத்தை மாற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று அமைச்சர் பிமல் தெரிவித்தார்.
கிளிநொச்சியில் உள்ள தேசிய

☞ 11

## இன்றும் வழமைபோன்று வடக்கில் பஸ் சேவைகள்!

யாழ்ப்பாணம், ஓக.18
வடக்கு மாகாணத்தில் இ.போ.ச பஸ் சேவைகள் மற்றும் தனியார் பஸ் சேவைகள் வழமைபோன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மற்றும் வெளிமாவட்டங்களுக்கான பஸ் சேவை

☞ 09





முத்துஐயன்கட்டு விவகாரம்

## அத்துமீறியோருடன் தொடர்பா? அதனாலேயே சிப்பாய்கள் கைது!

அரசாங்கம், பொலிஸ் விளக்கம்

கொழும்பு, ஓக.18
முத்துஐயன்கட்டு இராணுவ முகாமில் இருந்த ஒருவர் அல்லது சிலருடன் அத்துமீறி நுழைந்தவர்களுக்கு தொடர்பு இருக்கலாம் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே கைது இடம்பெற்றுள்ளது என்று

☞ 11

## பல்கலை மாணவர் ஒன்றியமும் ஹர்த்தாலை ஆதரிக்க மறுப்பு!

தன்னிச்சையான செயற்பாடு என்று குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக.18
யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், நெல்லியடி வர்த்தக சமூகம் என்பன இன்று அறிவிக்கப்பட்டுள்ள ஹர்த்தால் போராட்டக்குத்து ஆதரவு வழங்க மறுத்துள்ளன.
இது தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
தனியொருஅரசியல்கட்சியின் ஹர்த்தால் அழைப்புக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆதரவு வழங்க

☞ 09

**முச்சந்தி முரளி**

**‘ஹர்த்தாலை அறிவிச்சவை ஏசிக்குள்ள இருக்க அப்பாவிச்சனம் தானே எப்பவும் அந்தரிக்கிறது கண்டியளோ’**

முத்துஐயன்கட்டுச் சம்பவம்

## பொலிஸ்விசாரணைக்கு இராணுவம் ஒத்துழைக்கும்

இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.18
முத்துஐயன்கட்டுச்சம்பவம்தொடர்பில் பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு இராணுவம் முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வருன கமகே தெரிவித்துள்ளார்.
அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்

☞ 11

## ஓமந்தையில் கோர விபத்து: இருவர் பலி; பலர் படுகாயம்



வவுனியா, ஓக.18
வவுனியா, ஓமந்தை - ஏ-9 வீதியில் நேற்று இரவு நடந்த விபத்தில் பெண் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர். 13 பேர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில்

☞ 11

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 17.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4166 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 26 29 57 58 |
| விசேட எழுத்து | X |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 17.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1233 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 21 45 46 47 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 17.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0192 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 7 3 4 7 |


| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 17.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2272 |
| ஆங்கில எழுத்து | K |
| சுப்பர் இலக்கம் | 16 |
| வெற்றி இலக்கங்கள் | 08 14 35 66 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 17.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5924 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 0 0 1 8 1 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 17.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1954 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 08 18 38 71 |
| விசேட எழுத்து | T |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 17.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0499 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 1 8 1 9 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 17.08.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0040 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 26 35 41 |



# தற்காலிகமான தீர்வுகளைத் திணிக்க முயலவேண்டாம்

## காற்றாலைக்கு எதிரான போரில் மக்கள் ஆவேசம்

**மன்னார், ஓக.18**

**மன்னாரில் காற்றாலைக் கோபுரங்கள் அமைப்பதற்கும், கனிய மணல் அகழ்வதற்கும் எதிரான போராட்டம் 15ஆவது நாளாக நேற்று ஞாயிற்றுக்கிழமையும் தொடர்ந்தது. மன்னார் சுற்றுவட்டப் பகுதியில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், பல கிராமங்களையும் சேர்ந்த மக்கள் கலந்துகொண்டனர்.**

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:-

மன்னாரில் காற்றாலைக் கோபுரங்கள் வேண்டாம் என்பதும், மணல் அகழ்விலும் கனிம அகழ்விலும் ஈடுபடவேண்டாம் என்பதுமே எங்களின் கோரிக்கை. இந்த முடிவில் மறுபரிசீலனைக்கோ அல்லது மாற்றுத் தெரிவுக்கோ இடமில்லை. எனவே, மன்னாரில் மக்களின் விருப்பத்துக்கு முரணாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாகக் கைவிடப்படவேண்டும். ஆனால், அரசாங்கமோ தற்காலிகமாகவே தனது செயற்பாடுகளை ஒத்திவைத்துள்ளது. இதை ஏற்கமுடியாது. எனவே, திட்டம் முற்றாகக் கைவிடப்படும்வரை போராட்டம் தொடரும்-என்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தலையில் கருப்புப்பட்டி அணிந்தும், பல்வேறு வாசகங்களை எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியமிருந்தனர் என்பதுகுறிப்பிடத்தக்கது. (ம-41,56)

## நீரில் மூழ்கி 257 பேர் பலி

கொழும்பு, ஓக. 18

நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் (நேற்றுமுன்தினம் வரை) நீரில் மூழ்கி 257 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. உயிரிழந்தவர்களில் 37 பெண்களும் 220 ஆண்களும் அடங்குகின்றனர். நீரில் மூழ்கிய சம்பவங்களில் 69 உள்நாட்டவர்களையும், 33 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் பொலிஸ் உயிர்காக்கும் பிரிவு வெற்றிகரமாக மீட்டுள்ளது என்று பொலிஸ்ஊடகப்பிரிவு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-இ)

## வடக்குக் கடற்பரப்புகளில் கடும் காற்றுக்கு வாய்ப்பு!

கொழும்பு, ஓக. 18

வடக்கு மாகாணக் கடற்பரப்புகளில் கடும் காற்றுடன் கூடிய காலநிலை காணப்படும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது. இதுதொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் அத்துடன் கண்டி, நுவரெலியா,காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அடிக்கடி மழை பெய்யக் கூடும். நாட்டின் ஏனைய பிராந்தியங்களில் சீரான வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. கொழும்பு தொடக்கம் காலி ஊடாக மாத்தறை வரையான கடல் பிராந்தி யங்களின் சில இடங்களில் மழை பெய்யக்கூடும். மன்னார் தொடக்கம் காங்கேசன்துறை, முல்லைத்தீவு ஊடாக திருகோணமலை வரையான அத்துடன் சிலாபம் தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக மாத்தறை வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக் கூடும் - என்றுள்ளது. (ம-இ)



## உலக முயற்சியாளர் தினம்; வவு. பல்கலையில் பேரணி!

உலக முயற்சியாளர் தினத்தை முன்னிட்டு வவுனியாப் பல்கலைக் கழகத்தின் முயற்சியாண்மை கற்கைகள் பிரிவின் மாணவர்கள் இணைந்து நேற்றுப் பேரணியொன்றை ஏற்பாடு செய்தனர்.

இலங்கை முயற்சியாளர்களின் பொருளாதார மேம்பாட்டை உறுதிப்படுத்தும் நோக்கில், எதிர்வரும் 25 மற்றும் 26ஆம் திகதிகளில் வவுனியாப் பல்கலைக்கழகத்தில் புத்தாக்க வர்த்தகக் கண்காட்சி மற்றும் வர்த்தகச் செயற்பாடுகள் தொடர்பான கருத்தரங்குகளும் இடம்பெற வுள்ள நிலையிலேயே இந்த விழிப்புணர்வு ஊர்வலம் இடம்பெற்றுள்ளது. பேரணியில் துணைவேந்தர் அ.அற்புதராஜா, வியாபாரக் கற்கைகள்பீட விரிவுரையாளர்கள் மாணவர்கள் உட்படபலரும் கலந்து கொண்டனர். (ம-ஈ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 17.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0632 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 0 3 7 7 6 4 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 17.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2898 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 01 04 11 73 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 17.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | W |
| வெற்றி இலக்கம் | 18 19 22 79 |
| வெற்றி வாரம் | 5059 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 17.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0750 |
| வெற்றி இலக்கம் | 06 10 17 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 17.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சிம்மம் | |
| வெற்றி இலக்கம் | 13 23 27 55 |
| சீட்டிழுப்பு வாரம் | 4610 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 17.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | U |
| சுப்பர் இலக்கம் | 28 |
| வெற்றி இலக்கம் | 32 38 65 72 |
| வெற்றி வாரம் | 2074 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 17.08.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 02 24 31 32 |
| வெற்றி வாரம் | 2724 |

## தமிழகத்தில் போராடுவோர் கடற்றொழில் பினாமிகளே!

### யாழ். கடற்றொழிலாளர்கள் அறச்சீற்றம்

யாழ்ப்பாணம், ஓக.18

ஸ்ரீலங்கா கடற்படையின் கைது நடவடிக்கைகளுக்கு எதிராக, தமிழகத்தில் போராடுபவர்கள் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடும் கடற்றொழில் பினாமிகளே - இவ்வாறு யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய மீன்பிடி முதலாளிகளும், அரசியல்வாதிகளும் தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்படுவதைத் தமக்குச் சாதகமாகத் திசைதிருப்புகின்றனர். அவர்கள் தமது கபடத்தனமான செயற்பாடுகளால் அப்பாவி இந்தியக் கடற்றொழிலாளர்களை ஏமாற்றுகின்றனர். வடக்கின் கடல் வளங்களைச் சூறையாடுவதைக் கூலிக்காகக் கடலில் இறங்கும் தமிழகக் கடற்றொழிலாளர்கள் கைவிடவேண்டும்.

இலங்கையின் எல்லைக்குள் வந்து கடல் வளங்களைச் சூறையாடிய குற்றங்களுக்காகவே தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்படுகின்றனர். இது இலங்கையின் இறைமையுடன் கூடிய விடயம். இதைத் தமிழகத்தில் போராட்டங்களை முன்னெடுக்கும் தரப்பினர் புரிந்துகொள்ளவேண்டும்- என்றார். (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்கள்: ஐ.சிவசாந்தன்



# கார்த்திகைப்பூ சப்பறத்தில் நல்லூர்க் கந்தன் பவனி!

யாழ்ப்பாணம், ஓக. 18

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் விசுவாவசு வருட பெருந்திருவிழாவின் பத்தொன்பதாவது நாள் மாலைத் திருவிழா வான கார்த்திகை உற்சவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை 4.45 மணியளவில் வசந்தமண்டபப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து வள்ளி தெய்வயானை நாய கியர் சமேதரராய் முத்துக்குமாரசுவாமி உள்வீதியில் உலா வந்து அத னைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான அடியவர்கள் புடைசூழ மின்வி ளக்கு களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய சப்பறத்தில் நல்லூர்க் கந்தப் பெருமான் வெளிவீதியில் பவனி வந்தார். (ம-66)

நல்லூர் ஆலய வருடாந் திர மகோற்சவ 20ஆம் திருவிழாவான நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சந்தான கோபாலர் உற்ச வம் நடைபெற்றது. காலை 6.45 மணிக்கு இடம் பெற்ற வசந்தமண்டபப் பூஜையை அடுத்து தங்க ரிஷப வாகனத்தில் எழுந்த ருளிய சந்தான கோபாலர் உள் வீதியுலா வந்து, தொடர்ந்து வெளி வீதியுலா வும் வந்தார்.




# தெய்வீகக்கலை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக. 18

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல் லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்ச வத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகக்கலை அர்ச்சனை நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண் டபத்தில் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு இடம் பெறவுள்ளது. இதன்போது கந்தரோடை ஆலடி வீரகத்தி விநாயகர் ஆலய பஜனைக்குழுவினரின் பஜனை நிகழ் வும், தேவசேனா விஜயகுமாரசர்மாவின் வீணை இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித் துள்ளார். (ம-41)



படம்-ஐ.சிவசாந்தன்



நல்லூர்க் கந்த சுவாமி ஆலய வருடாந்திர மகோற் சவத் திருவிழாவின் 20ஆம் திருவிழாவான நேற்றுக் காலை பட்டித்திருவிழா பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ம)

# நல்லூர்க் கந்தன் ஆன்மிக அருளுரை

யாழ்ப்பாணம், ஓக. 18

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாக் காலத்தில் சிவ குரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டு வரும் ஆன்மிக அருளுரை இன்றுதிங்கட்கிழமை இருபத்தொராவது நாளாக நடை பெறவுள்ளது.

இன்று இரவு 8 மணி முதல் இரவு 8.30 மணி வரை நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீன மண்டபத்தில் இடம்பெறும் நிகழ் வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்துகொண்டு 'சிவஞானதேசி கனே சாகாவரம் தருவாய்' எனும் தலைப்பில் ஆன்மிக அரு ளுரை ஆற்றுவார். (ம-66)

# நல்லூரானுக்கு இன்று தங்கரத உற்சவம்

யாழ்ப்பாணம், ஓக. 18

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தங்கரத உற்சவம் இன்று திங்கட்கிழமை மாலை 4.45 மணியளவில் நடைபெறவுள்ளதுடன் காலை 6.45 மணியளவில் கஜவல்லி மஹாவல்லி உற்சவமும் இடம்பெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.45 மணியளவில் சப்பறத் திரு விழாவும், மாலை 4.45 மணியளவில் தண்டாயுதபாணி உற்சவமும் நடைபெறும். (ம-66)

# 21 ஆம் திருவிழா



## நல்லூரான் சிறப்பம்சம்



## சித்தருள் சித்தனையா! நீ

தேரேறும் திருக்குமரா! என்
மனமேற இங்குவா
திருவீதியல்லவா உன்
சிறப்பெல்லாம் சொல்லவா!
தேரேறும்.......

ஆதிக் கடவுள் நீ அருந்
தமிழர் தெய்வம் நீ
சோதிப் பிளம்பாகி அன்று
ஆறுமுக மானவனே!
தேரேறும்.......

நல்லூரில் உறைபவனே! பக்தர்
மனவூரில் வாழ்பவனே!
தொல்லூர் உனதூரல்லவா! உன்
தொன்மை யெல்லாம் சொல்லவா
தேரேறும்......

பக்தர்கள் புடைசூழ நல்லை
வீதியிலே வருபவனே!
சித்தருள் சித்தனே! நீர்
செங்கோல் செய்யுமையா!

கவிஞர் சரசாலையூரான்
ஓய்வுநிலை ஆ.ஆலோசகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும் நாளாக இருக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். சகோதரர்கள்மூலம் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கி சுமுக உறவு ஏற்படக்கூடும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** பயணங்களைத் தவிர்ப்பது அவசியம். வீட்டில் பணிச்சுமை அதிகரிக்கும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சிறு சிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்வழி உறவினர்கள் வருகை மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும்.

**சிம்மம்:** உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். அதிகாரிகளால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே இருந்துவந்த கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பொறுமையுடன் அணுகுவது நல்லது. சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக் கூடும்.

**விருச்சிகம்:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால், அவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். பிள்ளைகள் கேட்பதை மகிழ்ச்சியுடன் வாங்கி கொடுப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம்.

**மீனம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும்.

### கடந்த காலங்களில் தமிழர் பகுதிகளில்

# சமூகப் பிறழ்வுகள் திட்டமிட்டு விதைப்பு

### வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், ஓக. 18**

**எமது பிரதேசங்களில் கடந்த காலங்களில் சமூகப்பிறழ்வுகள் திட்டமிட்ட ரீதியில் ஊக்குவிக்கப்பட்டன. ஆனால் எதிர்காலத்தில் அவ்வாறு நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் பண்பாட்டுப் பெருவிழா, பிரதேச செயலர் த.ஜெயசீலன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஆளுநர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.**

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களது தனித்துவமான பண்பாடுகளைப் பேணிப்பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கடத்துவதற்காகப் பண்பாட்டுப் பெருவிழாக்கள் அவசியமானவை. விருந்தோம்பல், இரங்குதல், முதியோரை மதித்தல் என்பன தமிழர்களின் தனித்துவமான பண்பாடுகள். பழையன கழிதலும் புதியன புகுதலும் அவசியம்தான். அதற்காக நாம் எமது சமூகத்துக்கு ஒவ்வாத விடயங்களை உள்வாங்கக்கூடாது. நல்லவற்றை எடுத்துக்கொள்ளவேண்டும். எமது இளம் சமூகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் பலரும் கவலையடைகின்றனர். அவர்களைக் கல்விக்கு மேலதிகமாக இரண்டு வழிகள் ஊடாக மாற்றலாம் என்பது எனது ஆழமான நம்பிக்கை. கலை, விளையாட்டு ஆகியனவே அவை. இளைஞர்கள் கலைகளிலும், விளையாட்டுகளிலும் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை நாங்கள் உருவாக்கிக் கொடுக்கவேண்டும். சமூகப் பிறழ்வுகளை முறியடித்து நாம் முன்னேற வேண்டும் - என்றார். (ச-20,66,27)

## ‘அவளுக்குள் மலர்ந்த நான்’ சிறுகதை நூல் வெளியீடு

பதுளை, ஓக. 18

எழுத்தாளர் ஏ.எஸ்.பாலச்சந்திரன் எழுதியுள்ள ‘அவளுக்குள் மலர்ந்த நான்’ எனும் சிறுகதை நூல் எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு பதுளை ரேஸ்கோர்ஸ் வீதியில் அமைந்துள்ள ஊவா மாகாணசபை நூலகக் கேட்போர் கூடத்தில் வெளியிடப்படவுள்ளது.

எழுத்தாளர் கோவுஸ்ஸ ராம்ஜி உலகநாதன் தலைமையில் வெளிடப்படவுள்ள நூலின் வெளியீட்டு உரையை மகுடம் பதிப்பகத்தின் சார்பாக கவிஞர் மணிசேகரன், நூலின் ஆய்வுரையை ஓய்வுநிலை அதிபரும் வளவாளருமான பி.கமலேந்திரன், சிறப்புரையை பதுளையின் மூத்த எழுத்தாளர் சாரணாகையூம் ஆகியோர் ஆற்றவுள்ளனர். மேலும் எழுத்தாளர் கௌரவிப்பும், கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-41)



## ‘இரட்சணிய காவியம்’ நூல் வெளியீட்டு விழா

மன்னார், ஓக.18

மன்னார் பேசாலையின் எழுத்தாளரான அமரர் அவுறான் செபஸ்தியான் குரூஸ் எழுதிய ‘இரட்சணிய காவியம்’ எனும் நூல் வெளியீடு பேசாலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வெளியிடப்பட்டது. நூலின் முதற்பிரதியை புலவரின் மகனும் இங்கிலாந்து அங்கிலிக்கன் திருச்சபையைச் சார்ந்த அருட்திருவுமான செ.யோண் பிறின்சிலி குரூஸ், மன்னார் மறைமாவட்ட ஆயரிடம் கையளித்தார். சிறப்பு அதிதிகளாக யாழ்ப்பாணம் அமல மரித் தியாகிகள் சபை மாகாண முதல்வர் அருட்பணி செ.போல் ஜெயந்தன் பச்சேக் அடிகளார், மன்னார் மறைமாவட்டக் குரு முதல்வர் கிறிஸ்துநேசன் அடிகளார், பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயப் பங்கின் பங்குத்தந்தை ச.சத்தியராஜ் அடிகளார் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம-41,60)



இந்தியாவின் 79ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டம், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் அண்மையில் இடம் பெற்றது. (ம-25,20)

## மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்தால் சேவையாளர், சாதனையாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 18

மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்தின் ஏற்பாட்டில் உயர் சேவையாளர்கள் மற்றும் சாதனையாளர்கள் கௌரவிப்பு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் மூளாய் சித்திவிநாயகர் கலையரங்கில் மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்தின் தலைவர் திருமதி [illegible] தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தினராகவும், சங்கானைப் பிரதேச செயலாளர் திருமதி கவிதா உதயகுமார், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி யமுனா ராஜசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், ஆசிரியர் கணபதிப்பிள்ளை தளையரட்ணம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர். நிகழ்வில் உயர் சேவையாளர்களாகவிருந்து ஓய்வுபெற்ற அதிபர் திருமதி சுந்தரபாரதி சிவமலர், கிராம அலுவலர் நடராஜா சிவரூபன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டதுடன், விளையாட்டுத்துறையில் தேசிய சாதனை படைத்தவர்கள், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்கள், கல்விப் பொதுத் தராதர சாதாரணதரம் மற்றும் உயர்தரத்தில் அதிதிறமைச் சித்தியடைந்த மாணவர்கள் ஆகியோரும் விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டனர். (ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை வர்த்தகர்கள் ஹர்த்தாலுக்கு மறுப்பு!

வியாபார நடவடிக்கை தொடரும்

யாழ்ப்பாணம், ஓக. 18

தமிழரசுக் கட்சியால் அழைப்புவிடுக்கப்பட்டுள்ள வடக்குக் கிழக்கு தழுவிய கதவடைப்புப் போராட்டத்துக்கு, பருத்தித்துறை வர்த்தகர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

கதவடைப்புப் போராட்டத்திற்கு ஆதரவுகோரி தமிழரசுக் கட்சியின் வடமராட்சிக் கிளையினர் பருத்தித்துறை நகப் பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர். இதன்போதே, ஹர்த்தாலுக்கு மறுப்புத் தெரிவித்து கடையடைப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு அவர்கள் மறுப்புத்தெரிவித்துள்ளனர். ஏனைய அரசியற் கட்சிகளுடனும், சிவில் தரப்புடனும் உரியமுறையில் கலந்துரையாடி இந்த முடிவு எடுக்கப்படவில்லை. ஆதலால், இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைக்க முடியாது என்றும் வர்த்தகர்கள் கூறியுள்ளனர்.

அத்துடன், சகல வர்த்தத் நிலையங்களையும் மூடுமாறு நிர்வாகரீதியாக அறிவிப்பதில்லை எனவும் வர்த்தகர்களின் முடிவுக்கு விடுவதெனவும் பருத்தித்துறை வர்த்தக சங்கத்தின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-100)

## போதைப்பொருளுடன் சிப்பாய் கைதானார்!

கொழும்பு, ஓக. 18

இராணுவச் சிப்பாயொருவர் போதைப் பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேல் மாகாண குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது கொழும்பில் வைத்து அந்த இராணுவச் சிப்பாய் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதான சிப்பாய் 41 வயதுடையவர். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. (ம-25)

## சமஷ்டியை வலியுறுத்தி முரசுமோட்டையில் போர்

கிளிநொச்சி, ஓக. 18

சமஷ்டிக் கோரிக்கையை வலியுறுத்தி, வடக்குக் கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் முன்னெடுத்துவரும் தொடர் போராட்டத்தின் 17ஆம் நாள் கவனவீர்ப்பு நடவடிக்கை கிளிநொச்சி - முரசுமோட்டையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது. (ம-113)

## மூன்றாம் காலாண்டுடன் பணச்சுருக்கம் முடிவுறும்

கொழும்பு, ஓக. 18

நாட்டின் பணச்சுருக்க நிலைமைகள் மூன்றாம் காலாண்டில் நிறைவடையும் என்று எதிர்பார்ப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

பணவீக்கமானது 2024ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்திலிருந்து எதிர்மறையான வீச்சில் தொடர்ந்து காணப்பட்டது. மின்சாரம், போக்குவரத்து மற்றும் உணவு ஆகியவற்றில் ஏற்பட்ட விலைத்தள்வு இந்தப் பணச்சுருக்கத்துக்குக் காரணமாக அமைந்துள்ளது எனக் கூறப்பட்டுள்ளது. (ம-இ)

## சீன அரசாங்கத்திடமிருந்து 500 மில்லியன் டொலர்கள்

கொழும்பு, ஓக. 18

சீனாவிடம் இருந்து 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் உதவியைப் பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. கண்டி அதிவேகப்பாதையின் எஞ்சிய நிர்மாணப் பணிகளை நிறைவுசெய்வதற்காக குறித்த கடனுதவியைப் பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் கூறப்படுகின்றது. (ம)

## மாகாணசபைத் தேர்தலை இழுத்தடிக்க முயற்சி



கொழும்பு, ஓக. 18

மாகாணசபைத் தேர்தல் விவகாரத்தில் அரசாங்கம் மௌனம் காத்துவருகின்றது. இதன்மூலம் தேர்தலை இழுத்தடிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றமை தெளிவாகின்றது என்று முன்னாள் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- தேர்தல் என்பது மிக முக்கியமானது. மாகாணசபைத் தேர்தலானது நெடுங்காலமாக நடத்தப்படாமல் உள்ளது. அதனை நடத்துவதற்கு மிகவும் பொருத்தமான சூழல் தற்போது உதயமாகியுள்ளது. அரசாங்கம் மற்றும் எதிரணிக்கு மக்கள் மத்தியில் உள்ள செல்வாக்கை அறிவதற்கு இது மிகச்சிறந்த ஜனநாயகக் கருவியாக அமையும். எனினும், மாகாணசபைத் தேர்தலைப் பற்றி ஆளுங்கட்சியினர் கதைப்பதே இல்லை. இதன்மூலம் அவர்கள் தேர்தலை இழுத்தடிக்கின்றனர் என்பது புலனாகின்றது- என்றார். (ம-44)

முன்னாள் அமைச்சர்

## மனுஷ நாணயக்கார விசாரணைக்கு அழைப்பு

கொழும்பு, ஓக. 18

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார். நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சட்டவிரோத சொத்துகள் புலனாய்வுப் பிரிவில் வாக்கு மூலம் வழங்குவதற்காக நாளைமறுதினம் முன்னிலையாகுமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-இ)




## புத்தியைத் தீட்டுங்கோ

ஆமை ஆயிரம் முட்டை போட்டாலும் அமைதியா இருக்க, ஒரேயொரு முட்டையைப் போட்டிட்டு கோழி ஊர்முழுக்கக் கொக்கரிச்சுக்கொண்டு திரியும். அப்பிடித்தான் இருக்குது வீட்டுக்கட்சியின்ர சட்டாம்பியார் அறிவிச்ச ஹர்த்தால் விசயமும். ஏதோ எலக்சனுக்குப் பிரசாரம் செய்யிறமாதிரி தன்ர செம்புகள் எல்லாரையும் களத்தில ஏவிவிட்டிருக்கிறார் சட்டாம்பியார். ஆனால் ஆளுக்கு இப்பிடியான மக்கள் போராட்டம் புதுப்பழக்கம் எண்டதால, அதை எப்பிடிச் செய்யிறதெண்டு சட்டாம்பியாருக்குத் தெரியேலை. அதோட அவரின்ர செம்புகளுக்கும் தங்கட கடன் தாளம் போட்டுக்கொண்டே இருக்கிறது எண்டு இவ்வளவு காலமும் இருந்ததால அவைக்கும் சனத்தின்ர நாடித்துடிப்புத் தெரியேலை. அதால ஹர்த்தாலுக்கு ஆதரவு திரட்டப்போய் எல்லா இடமும் வில்லங்கத்தைத்தான் விலைகுடுத்து வாங்கிக்கொண்டிருக்கினம்.

ஏற்கனவே வவுனியாவிலையும், கிளிநொச்சியிலையும் 'உந்தக் ஹர்த்தாலுக்கு நாங்கள் முழுசா ஆதரவு தரமாட்டம், வேணுமெண்டால் ஒருமணித்தியாலம் மட்டும் கடையைப் பூட்டலாம்' எண்டு எல்லாக் கடைக்காரரும் முகத்தில அடிச்சமாதிரி சட்டாம்பியாருக்கே சொல்லிப்போட்டினம். அப்பிடியொரு அவமானம் யாழ்ப்பாணத்திலையும் வரக்கூடாது எண்டு, மாநகருக்குப் பொறுப்பான அம்மணியை யாழ்ப்பாணக் கடைக்காரரிட்ட ஆதரவு கேட்டு அனுப்பியிருக்கிறார் சட்டாம்பியார். அவாவும் உடையாரின்ர பொல்லுமாதிரி அங்கபோய் ஆதரவு கேக்கிறன் எண்டு நினைச்சு குட்டையைக் குழப்பிப் போட்டு வந்திருக்கிறா. ஏற்கனவே அந்த அம்மணிக்கு சுயபுத்தி இல்லை. அவாவுக்கு சொல்புத்தி மட்டும்தான். அதுக்காகத்தான் அவாவுக்கு எப்பிடி நிர்வாகம் செய்யவேணும் எண்டு சொல்லிக்குடுக்க தன்ர ஆக்களை அவாவுக்கு உதவியா சட்டாம்பியார் போட்டிருக்கிறார். இப்பிடிச் சொல்புத்தி கேக்கிற அம்மணி யாழ்ப்பாணம் கடைக்காரரை, ஏதோ தங்கட கட்சிச் செம்புகள் மாதிரி டீல் பண்ண வெளிக்கிட்டதுதான் பிரச்சினையாப் போட்டுது.

இந்தக் ஹர்த்தால் அஞ்சு சதத்துக்கும் சனத்துக்கு பிரியோசனமில்லை எண்டு கடைக்காரர் எல்லாரும் காரணகாரியங்களோட சொல்லியிருக்கினம். 'ஒரு தனியாள் ஹர்த்தாலை அறிவிச்சுப் போட்டு இப்ப வந்து ஆதரவு கேக்கிறது பிழை. கடையடைப்புப்போட சம்பந்தப்பட்டது நாங்கள்தான், எங்களோட கதைச்சுத்தானே அவர் முடிவெடுத்திருக்க வேணும்' எண்டு அவையள் கேட்டு 'சொல்புத்தி அம்மணிக்கு' சுட்டுப்போட்டுது. 'அப்ப இஞ்ச ஆமி இருக்கோணும் எண்டு நினைக்கிறியளோ? ஒரு போராட்டத்துக்கு ஆதரவு தர உங்களுக்கு முடியாதோ? அப்ப சனத்துக்கு எதிரான ஆக்கள்தான் நீங்கள்' எண்டு எடுத்தெறிஞ்சு கதைச்சிருக்கிறா. ஆனால் கடைக்காரரும் விடேலை 'நீங்கள் இப்ப அரசியலுக்கும் பதவிக்கும் வந்த பிறகுதான் சனம், போராட்டம், ஹர்த்தால் எண்டு நிக்கிறியள். இவ்வளவு காலமும் ஆமிப்பிரச்சினைக்குள்ளையும் எத்தினையோ கடையடைப்பை நடத்தின ஆக்கள்தான் நாங்கள்' எண்டு சொல்ல, அம்மணிக்கு என்ன செய்யிறதெண்டு தெரியாமல் அப்பிடியே எழும்பிப் போட்டாவாம். ஒரு ஹர்த்தாலை வைச்சுக்கொண்டு இவையள் படுறபாட்டால வீட்டுக்கட்சிக்கு இருந்த ஆதரவும் இல்லாமல் போய்க்கொண்டிருக்கு கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரினவாதத்தின் கோரம் இனவழிப்பாக நீட்சி!

## ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஓக.18
தமிழ்த் தேசிய இனத்தின்மீது பேரினவாத இலங்கை அரசு கடந்த காலங்களில் மேற்கொண்ட இனவழிப்புச் செயற்பாடுகள் தற்போது, கட்டமைக்கப்பட்ட இனவழிப்புச் செயற்பாடுகளாக நீட்சிபெற்றுள்ளன என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
உலகில் மிகக் கொடூரமான தாக்குதல்களை, படுகொலைகளை மேற்கொண்ட இராணுவங்களில் இலங்கை இராணுவமுமொன்றாகும். வெள்ளைச் சீருடையோடு கல்விகற்கச் சென்ற எமது பிள்ளைகளின்மீது விமானம் குண்டுமழை பொழிந்தது. எமது பிள்ளைகளின் வெள்ளைச் சீருடைகள் குருதியால் நனைந்து சிவப்புச் சீருடைகளாக மாறியிருந்த கோலம், உடல்கள் சிதறிக்கிடந்த நிலைமை, இத்தகைய கொடூரமான சம்பவத்தை யாரும் மறந்துவிடமுடியாது.

தற்போது தமிழர்கள் நாங்கள் நலிவடைந்தவர்களாக, அடிமைகளாக இருக்கின்ற நிலைகள் காணப்படுகின்றன.

தற்போது தமிழர் தாயகத்தில் தமிழர்களுக்கு எதுவுமில்லையென்ற நிலையாகிவிட்டது. கடலிலே தொழில் செய்யமுடியாத நிலைமை, ஆறு மற்றும் குளங்களில் தொழில் செய்ய முடியாதநிலை, வயலில் தொழில் செய்யமுடியாதநிலையென எமது தமிழ் மக்கள் தொழில் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முடக்கப்பட்டுள்ளனர். எமது தமிழ்மக்களின் காணிகள் திட்டமிட்டவகையில் அபகரிக்கப்படுகின்ற நிலைமைகள் காணப்படுகின்றன.

நிலமில்லையேல் எமக்கு எதுவுமில்லை.

எனவே தமிழ்த்தேசிய இனத்தின்மீது இனவழிப்பை மேற்கொண்ட, கட்டமைக்கப்பட்ட இனவழிப்பை மேற்கொள்கின்றவர்கள் அதற்கு உரிய பொறுப்புக்கூறலைச் செய்கின்ற காலம் வரும். உரிய தீர்வு கிட்டும் - என்றார்.

(சு-246)


## மணல் விற்பனைக்குண்டு

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் விற்பனைக்குண்டு. கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதி பத்திரம் போட்டு தரப்படும்.

தொடர்புகளுக்கு: **077 412 1100**
**076 324 9977**



## சமையலுக்கு ஆள் தேவை

4 பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு சமையலுக்கு ஆள் தேவை. சம்பளம், வேலை நேரம் பேசித் தீர்மானிக்கலாம். உதயன் விருந்தினர் விடுதி 392/6 நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயிலுக்கு அருகில்) என்ற முகவரிக்கு இன்று நேரில் வரவும்.




## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய ஆசிரியை திருமதி.சுசிதா கஜந்தன் அவர்களின் அன்பு மாமனார்

**நாகன் இராசதுரை**

கடந்த 19.07.2025 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 05.03.1950 மறைவு 19.07.2025

அதிபர், ஆசிரியர்கள்
கல்வயல் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயம், சாவகச்சேரி

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 • 02 • 1955



மறைவு 16 • 08 • 2025

**வடிவேலு போதிநாதன்**

யாழ்ப்பாணம் சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், கனடா டொரொன்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு போதிநாதன் அவர்கள் 16.08.2025 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், சத்தியபாமா அவர்களின் அன்புக்கணவரும், தர்ஷனின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற லோகேஸ்வரி மற்றும் பவுனேஸ்வரி, கேசரிலோகன், கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சிங்கராசா பாலசிங்கம், யோகலட்சுமி மற்றும் நடேசன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் 20.08.2025 புதன்கிழமை கனடாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(CS 59159)

தொடர்பு: **077 837 4710**
தகவல்: **குடும்பத்தினர்**

## துனுக்காய்ப் பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்
### துனுக்காய் (வ-து)

பதிவு இல : ப.45 - 31.01.1971

**கண்ணாடி அலுமினிய பிற்றிங் வேலைகள்**

எமது சங்கத்தின் மல்லாவி எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு கண்ணாடி அலுமினிய "பிற்றிங்" வேலைகள் மேற்கொள்வதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றது. இவ் வேலையினை மேற்கொள்ள விரும்புபவர்கள் இதற்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமை காரியாலயத்தில் ரூபா 200.00 இனை செலுத்திப் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 26.08.2025ம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **"தலைவர், துனுக்காய்ப் பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், துனுக்காய்"** எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.


*குறிப்பு : சங்கத்தின் பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதியானது என்பதையும் விண்ணப்பக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

**பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின்படி**
**கூட்டுறவு சேவையிலுள்ள**
**தலைவர்**
**திரு.பொ.கோனேஸ்வரன்**
**பல நோக்கு கூட்டுறவு சங்கம் துனுக்காய்.**

(CS 59145) E

## முதலாம் ஆண்டு நினைவு

தோற்றம் 28 • 11 • 1948



மறைவு 18 • 08 • 2024

**அமரர் நவரத்தினம் தர்மராசா (MGR)**

திதி : 05.09.2025

காரை மண்ணின் மைந்தா நவமணி தந்த நாயகனே
கால மெல்லாம் எமை கண் இமை போல் காத்தவரே
காது குளிரும் இசை வெள்ளத்திற்கு ஆவன வகுத்தவரே
காலனவன் அழைத்தவுடன் ஈசன் பாதம் சென்றனையோ

அப்பா விண்ணக வாழ்வில் அகவை ஒன்று ஆனது வோ
தங்கள் பாசமும், அன்பு அரவணைப்பு, ஆளுமை என்றும்
எங்கள் எல்லோரையும் விட்டு அகலாது
உங்கள் இழப்பு எங்களால் ஈடு செய்ய முடியாது

தங்கள் ஆத்மா தில்லைக் கூத்தன் பாதம் அமர
ஈழத்து சிதம்பரத்தான் இறைஞ்சுவோமாக

55/2, மார்சலஸ் றோட்
பள்ளன்சேனை
நீர்கொழும்பு

**குடும்பத்தினர்**
**077 603 3259**

(CS 59153) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

பரம எதிரியாக இருந்தாலும் நோய்வாய்ப்பட்டு இருக்கும்போது பார்க்கத் தவறாதே.

– கண்ணதாசன்–


# ஒரு மருத்துவத்தின் மறைவு...!

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சத்திரசிகிச்சை நிபுணரும், 'குழாய்வழிச் சத்திர சிகிச்சைகளின் இமயம்' என்று மக்களால் அழைக்கப்படுபவருமான மருத்துவர் வெங்கடாசலம் சுதர்சனின் மறைவால் ஒட்டுமொத்த மருத்துவ உலகும், தமிழ்ச் சமூகமும் சொல்லொணா வேதனைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றன. மருத்துவத் துறையினர் மட்டுமல்லாமல், அனைத்துத் தமிழ் மக்களும் ஏன் தென்னிலங்கையில்உள்ளமக்களும்கூட மருத்துவர் வெங்கடாசலம் சுதர்சனின் மறைவைப் பேரிழப்பாகவும் - தமது குடும்பத்தில் நிகழ்ந்த துர்ச்சம்பவமாகவும்தான் பார்க்கின்றனர். ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் கொட்டிக்கிடக்கும் அனுதாபக் குறிப்புகள் அவரின் மறைவு எத்தனை கொடியது என்பதைத்தான் கட்டியம் செய்கின்றன.

மருத்துவர்களைக் கடவுளுக்கு நிகராகக் காணும் கலாசாரமொன்று எம்மத்தியில் முன்பிருந்தது. அன்றிருந்த மருத்துவர்கள் சேவையைக் கண்ணாகக் கொண்டவர்கள். ஆதலால், இறைக்கு ஒப்பாக தமிழர்கள் தமது இதயங்களில் அவர்களைப் பொருத்தியதில் ஆச்சரியத்துக்கு இடமில்லை. காலப்போக்கில் பணம் பார்க்கும் தொழிலாக உருவெடுத்த நிலைமை, மருத்துவத்துறையை விழுங்கியது. தட்சணைத்தட்டின் கனதியைப் பொறுத்தே மருத்துவக் கடவுள்கள் அனுக்கிரகம் பண்ணத்தொடங்கினார்கள். இந்த 'வியாபாரப்போக்கு' பல்கிப்பெருகியதால் சேவையைக் கருத்தாகக்கொண்ட மருத்துவர்கள் காணாமற் போனார்கள். விரல்விட்டு எண்ணும் அளவுக்கு நிலைமை மாறியது. அப்படியான ஒரு சமுதாயம் உருவாகிக்கொண்டிருந்தபோதுதான், 'நான் வேறுமாதிரி' என அனைத்தையும் மாற்றி, தன் கனிவான பேச்சாலும், பண்பான நடத்தையாலும், இரக்க குணத்தாலும் தனித்துத் தெரியும் விண்மீனாக நின்றார் மருத்துவ நிபுணர் வெங்கடாசலம் சுதர்சன்.

மருத்துவத்துக்கும் உளவியலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. பாதி நோய்கள் ஒருவரை அரவணைப்பதிலும், அவரில் அக்கறை கொள்வதிலும் குணமாகின்றன என்று மேற்கத்தேய நாடுகளில் கூறுவதுண்டு. மீதி நோய்கள்தான் மருந்துகளால் கட்டுப்படுத்தப் படுகின்றன, குணமாகின்றன. 'உங்களுக்கு இந்த நோயா! இதனால்தான் ஒருவர் கடந்த வாரம் இறந்தவர்' என்று கூறுவதற்கும், 'அதெல்லாம் ஒரு பிரச்சினையும் இல்லை. எல்லாம் வெல்லலாம்' என்று கூறுவதற்கும் இடையில் இமாலய வேறுபாடு உள்ளதல்லவா?. இந்த அணுகுமுறையைத் தன் மருத்துவத்தின் நாடித்துடிப்பாகக் கொண்டவர்தான் மருத்துவர் சுதர்சன்.

நற்குணத்தையும் கெட்டித்தனத்தையும் ஒருசேரக் காண்பது அரிது. அதில், மருத்துவ நிபுணர் வேறுபட்டவர். அவர், இலங்கையில் உள்ள மிகச் சிறந்த குழாய்வழிச் சத்திரசிகிச்சை நிபுணர்களில் பெரிதும் பேசப்படுபவராக இருந்தார். சாவின் கதவுகளை ஏறக்குறைய திறக்கும்நிலையில் இருந்தவர்களை மீட்டு, மறுவாழ்வு கொடுத்த மகான். ஆதலால்தான் அவரின் இறப்பை - இழப்பை தமக்கு ஏற்பட்ட இழப்பாக எண்ணி மக்கள் வெதும்புகின்றனர். நல்லவர்களின் மறைவும்கூட ஏதோவொரு பாடத்தைக் கற்பிக்கும். மருத்துவ நிபுணர் சுதர்சனின் மறைவும் அத்தகையதே. தமக்காகச் சேவை செய்பவர்களை மக்கள் எவ்வாறு அடையாளம் காண்பார்கள் என்பதற்கும், எவ்வளவுதூரம் இதயத்தில் பொருத்தி வைப்பார்கள்என்பதற்கும்மருத்துவர்வெங்கடாசலம் சுதர்சன் வாழ்வாகியிருக்கின்றார்.



முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக

## நாடாளுமன்றத்துக்குள் புகுந்தது ஊழல் விசாரணை ஆணைக்குழு

**கொழும்பு, ஓக. 18**

**ஊழல், மோசடி குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள முன்னாள் அமைச்சர்கள் 20 பேருக்கு எதிராக ஊழல் விசாரணை ஆணைக்குழு நாடாளுமன்றத்துக்குள் புகுந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.**

ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப் பட்டுள்ள முன்னாள் அமைச்சர்கள், கடந்த அரசாங்கங்களின் காலத்தில் பெற்றுவந்த சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பில் தகவல் திரட்டும் நடவடிக்கைகளில் ஊழல் விசாரணை ஆணைக் குழு ஈடுபட்டுவருகின்றது.

இதன் ஒரு பகுதியாகவே, நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தும் விசாரணை நடத்திவருகின்றது.

அமைச்சர்களாகப் பதவி வகிப்பதற்கு முன்னர் அவர்களிடம் இருந்த சொத்துகள், தற்போது அவர்களிடம் உள்ள சொத்துகள் தொடர்பில் உறுதிப்படுத்துவதும் இந்த விசாரணையின் நோக்கம் என்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அமைச்சர்கள் இருவர், முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஒருவர், முன்னாள் முதலமைச்சர் ஒருவர் மற்றும் முன்னாள் ஆளுநர் ஒருவர் தொடர்பில் தற்போது பெருமளவு ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு மேலும் கூறியுள்ளது. (ம-75)



## ஈஸ்டர் தாக்குதலுக்கு ஜே.வி.பி.யும் பொறுப்பு

கொழும்பு, ஓக. 18

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்துக்கு தற்போதைய அரசாங்கமும் பொறுப்புக் கூறவேண்டும் என்று பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு, ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் ஊழல் ஒழிப்புப் பிரிவில் ஜே.வி.பி.யினர் அங்கம் வகித்தனர். அலரிமாளிகையில் தங்கியிருந்தனர். எனவே, அக்காலத்தில் இடம்பெற்ற பாவச் சம்பவங்களுக்கு இந்த அரசாங்கமும் பொறுப்புக் கூறவேண்டும் - என்றார். (ம-44)

## பிரதமர் ஹரிணி சீனா பயணம்!

ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரதமர் ஹரிணி அமரசூரிய எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். மூன்று நாள்கள் சீனாவில் தங்கியிருக்கும் அவர், சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உள்ளிட்ட அந்தநாட்டுத் தலைவர்களுடன் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளார். (ம-இ)



## பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பொதுவேட்பாளர் அல்லர்

கொழும்பு, ஓக. 18

எதிரணிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் இறங்கியுள்ள பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் அல்லர் என்று முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிரணிகளை பொதுவானதொரு மேடைக்குக் கொண்டு வரும் முயற்சியே இடம்பெறுகின்றது. சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபுணராக பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இருக்கின்றார். அதனால் அவர் இதில் பங்கெடுத்துள்ளார். மற்றும்படி அவர் இம்முயற்சியின் தலைவரோ அல்லது அடுத்த ஜனாதிபதி வேட்பாளரோ அல்லர். இது தொடர்பில் அவருக்கு எவ்வித விருப்பமும் இல்லை - என்றார். (ம-44)

## தபால் ஊழியர்களின் விடுமுறைகள் ரத்து!

கொழும்பு, ஓக. 18

தபால் ஊழியர்கள் தொழிற்சங்கப் போரட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளநிலையில், அவர்களின் விடுமுறைகள்இரத்துச்செய்யப் பட்டுள்ளதாக தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார். அஞ்சல் மற்றும் விநியோக சேவைகளில் ஏற்படக்கூடிய இடையூறுகளைக் கவனத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தபால்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

நாளை

செவ்வாய்க்கிழமை - ஆவணி 03

19.08.2025

சுபநேரம் : 10.35 - 12.05

ராகுகாலம் : 03.05 - 04.35

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் வழிவிட்டாலும் திணைக்களங்கள் முட்டுக்கட்டை

## வவுனியா விவசாய சம்மேளனம் தெரிவிப்பு

வவுனியா, ஓக.18

வனவளத் திணைக்களத்தால் எல்லையிடப்பட்ட காணிகள் விடுவிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்தாலும் வவுனியாவைப் பொறுத்தவரை அவ்வாறு எந்தக் காணியும் விடுவிக்கப்படவில்லை என்றே கூறவேண்டும் என வவுனியா மாவட்ட விவசாய சம்மேளனம் தெரிவித்துள்ளது.


இதுதொடர்பில் வவுனியாவில் அண்மையில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வவுனியா மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் எஸ். பிரான்சிஸ் தெரிவிக்கையில்,



பொதுமக்கள் காடுகளாக இருக்கும் தமது காணிகளைத் துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். வனவளத்திணைக்களம் அந்தப் பணியைச் செய்யத்தடைபோடுகின்றது. அவ்வாறு செய்பவர்களையும் கைதுசெய்கின்றது. இந்தநிலை தொடர்ந்தால் எவ்வாறு மக்கள் தமது காணிகளைத் துப்புரவாக்குவது. சில காணிகளுக்குள் கிணறுகள் உள்ளன. அவ்வாறான காணிகளையும் புனரமைக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. 30வருடங்களாக இடம் பெயர்ந்த மக்கள் இன்னும் தமது சொந்த இடங்களுக்கு மீளத்திரும்பவில்லை. அவர்களது வீடுகளை மூடிக் காடுகள் வளர்ந்துள்ளன. அந்தக் காணிகள் தொடர்பாக கிராம அலுவலர்கள் உறுதிப்படுத்திக் கடிதம் வழங்கினாலும் வனவளத்திணைக்களம் அதனை ஏற்கமறுக்கின்றது.

பலர் காணிகளுக்கான அனுமதிப்பத்திரத்தையும் வைத்துள்ளனர். ஆனால் அது செல்லுபடியாகாது என்று கூறுகின்றனர். இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இதற்கு அரசாங்கம் நல்லதொரு தீர்வை வழங்க வேண்டும் - என்றார். (ச-110)

# மரண அறிவித்தல்



## பத்மநாதன் சிவமணிதேவி

இணுவில் கிழக்கு வங்கியடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் (முத்துலிங்கம்) சிவமணிதேவி அவர்கள் கடந்த (14.08.2025) வியாழக்கிழமை இறைபதமடைந்துவிட்டார் .

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மாணிக்கம் தம்பதியரின் மகளும், கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலாதேவியின் பாசமிகு சகோதரியும், பத்மலிங்கம், பத்மலோஜினி, பத்மறூபி, காலஞ்சென்ற பத்மறூபன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவபாக்கியத்தின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2025) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பகர்கள் அனை வரும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

070 613 0023 மகன் - பத்மலிங்கம்
077 402 3809 பெறாமகன் - றமேஸ்

தகவல்:
குடும்பத்தினர்

# எல்லை தாண்டிய மீன்பிடியில் பாதிப்புறுவது வடபகுதி மீனவரே

## யாழ். கடற்றொழிலாளர் சங்க உப தலைவர் நற்குணம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக.18

எல்லை தாண்டி வந்து மீன்பிடி யில் ஈடுபடுவதால் பாதிக்கப்படப்போவது வடபகுதி மீனவர்களே என யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் உப தலைவர் செல்லத்துரை நற்குணம் தெரிவித்துள்ளார்.


யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வறிய மக்களைத் திசைதிருப்பும் நோக்கில் அவர்களை பகடைக் காய்களாகப் பயன்படுத்தி இந்தியாவிலே அரசியல்வாதிகளும் இழுவைமடித் தொழிலாளர்களும் இணைந்து உண்ணாவிரதப் போராட்டத்திலும், கடையடைப்பிலும் ஈடுபட்டுள்ளார்கள். எல்லை தாண்டி வந்து மீன்பிடி யில் ஈடுபடுவதால் பாதிக்கப்படுவது வடபகுதி மீனவர்களே. இவ்வாறு மீன்பிடியில் ஈடுபடுகின்றவேளைஅவர்களைக் கைதுசெய்துசிறையில்அடைக்கும்போது அப்பாவி இந்திய மீனவர்களுமே பாதிக்கப்படுகின்றனர்.

முதலாளிகளும் அரசியல்வாதிகளும் தப்பிவிடுவார்கள். இது ஒரு தடைசெய்யப்பட்ட சட்டவிரோதத் தொழில். எமது வாழ்வாதாரத்தையும் வளங்களையும் அழிப்பதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்- என்றார். (ச-27)

# மரண அறிவித்தல்

தோற்றம்
01.04.1952



மறைவு
17.08.2025

## மாசிலாமணி குலராசா

உடுவில் கிழக்கு, பெரியமதவடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட மாசிலாமணி குலராசா நேற்று (17.08.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாசிலாமணி-இராசமணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சறோஜினிதேவி, சிவராசா, ராகினிதேவி (ராதா), மாலினிதேவி, தர்மபாலன், தவராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மனோகரன், உதயணன் மற்றும் சித்திரா, யோகேந்திரகுமார், ஜெயரஞ்சினி, வனஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.08.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பெரியமதவடி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 400 4137




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார இணைப்பின்றி தேவிபுரம் மக்கள் அவதி

முல்லைத்தீவு, ஒக.18

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தேவிபுரம் (அ)பகுதியில் மின்சாரம் இன்மை மற்றும் வீதிகள் சீரின்றிக் காணப்படுவதால் அப்பகுதியில் வசிக்கும் விவசாயக் குடும்பங்கள் பெருத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

தேவிபுரம் (அ)பகுதியில் இரண்டாம் குறுக்குவீதி மற்றும் மூன்றாம் குறுக்குவீதிப் பகுதிகளில் 24க்கு மேற்பட்ட விவசாயக்குடும்பங்கள் வாழ்ந்துவருகின்றன. அப்பகுதியில் 200ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தில் விவசாயநடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இருப்பினும் இதுவரை அந்தப்பகுதிக்கு மின்னிணைப்புப் பொருத்தப் படவில்லை.

குறிப்பாக இப்பகுதியில் மின்னிணைப்புப் பொருத்தப்படாமையினால் எரிபொருளின் பயன்பாட்டில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரங்களைக் கொண்டே விவசாயிகள் தமது பயிற்செய்கைகளுக்கு நீர்ப்பாசனம் செய்கின்றனர். இதனால் எரிபொருளுக்கு அதிகளவில் செலவு செய்யவேண்டியுள்ளது. எனவே இந்தப் பகுதிக்கு மின்னிணைப்பினை வழங்கினால் எரிபொருளுக்கான செலவினம் குறைவடைவதுடன், மேலதிகமாகவும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளக்கூடிய நிலை ஏற்படும் என்றும் அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டினர். (ச-26,246)

# சலுகைகள் நீக்கம்; நீதிமன்றை நாடேன்

## ரணில் தரப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஒக.18

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை நீக்குவதற்கு அரசு எடுத்திருக்கும் தீர்மானத் துக்கு எதிராக நீதிமன்றம் செல்வதற்கு முன்னாள் ஜனாதிபதிகள் தீர்மானித்துள்ளபோதிலும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மாத்திரம் நீதிமன்றம் செல்லமாட்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சி வட்டாராம் தெரிவித்துள்ளது.

அதற்கான வாய்ப்பு தமக்கு இல்லையென்றும் ஏனைய முன்னாள் ஜனாதிபதிகள் நீதிமன்றம் சென்றால் அவர்களுக்குத் தனது ஆதரவை வழங்குவதில்லை என்றும் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியிடம் கூறியதாக அந்த வட்டாரம் மேலும் கூறுகிறது. (ச-75)

## மரண அறிவித்தல்



**அருட்சகோதரர் அந்தோனி மருசலின்**

திருவுள சபையின் மூத்த உறுப்பினரும் யாழ்ப்பாணம், மன்னார் மறைமாவட்டங்களில் மறைவாழ்வுப் பணியாளருமாக பணிபுரிந்த அருட்சகோதரர் அந்தோனி மருசலின் அவர்கள் நேற்று (17.08.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அருட்சகோதரர் அவர்களின் உடல் இல 341, "திருவடி" கொழும்புத்துறை வீதியில் (துண்டி சந்தி) அமைந்துள்ள திருவுளசபை சிறியகுருமடத்தில் பிரார்த்தனைக்காகவும் அஞ்சலிக்காகவும் வைக்கப்பட்டுள்ளது.

சகோதரர் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இரங்கல் திருப்பலி நாளை (19.08.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 03.00 மணியளவில் யாழ். மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

சகோதரனின் ஆன்மா அமைதியில் இளைப்பாறுக.

தகவல்:
இலங்கை மாகாண அதிபர்
திருவுள சபை

## புதிய...

உருவாக்கப் பணிகளை ஆரம்பித்தல், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குதல், மாகாணசபைத் தேர்தல்களை விரைந்து நடத்துதல் ஆகிய விடயங்களும் உள்வாங்கப்படவுள்ளன.

செம்மணி சித்துபாத்தி மனிதப்புதைகுழி விவகாரம் சர்வதேச கவனம் பெற்றிருக்கும் நிலையில், மனிதப்புதைகுழிகளுடன் தொடர்புடைய விடயங்களும் புதிய பிரேரணையில் உள்ளடக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் அடுத்த மாதம் 8ஆம் திகதி ஆரம்பமாகி, ஒக்ரோபர் மாதம் 8ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

தற்போது நடைமுறையில் இருக்கும் 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தீர்மானத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள ஆணைக்கு அமைவாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் 'இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டம்' முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஆணையாளர் அலுவலகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான விரிவான எழுத்து மூல அறிக்கை, கூட்டத்தொடரின் ஆரம்பநாளான 8ஆம் திகதி ஆணையாளர் வோல்கர் டேர்க்கால் பேரவையில் சமர்ப்பிக்கப்படும்.

இந்தக் கூட்டத்தொடரிலேயே பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகள் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணையொன்றைச் சமர்ப்பிக்கவுள்ளன. (அ-எ-இ)

## பல்கலை...

முடியாது. ஹர்த்தால் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்க முன்னர் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தமிழ்த் தேசியம் சார்ந்த அனைத்துக் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சிவில் சமூக அமைப்புகள் ஆகியவற்றுடன் கலந்துரையாடியிருக்கவேண்டும். அதில் ஒரு தீர்மானத்தை எட்டி பொதுவான திகதியில் ஹர்த்தால் போராட்டத்துக்கான அழைப்பை விடுத்திருக்கவேண்டும்.

இவை எதுவும் செய்யாமல் ஒரு கட்சியைச் சேர்ந்த சிலர் தன்னிச்சையாகத் தீர்மானம் எடுத்துவிட்டு ஆதரவுகோரும் பட்சத்தில் மாணவர் ஒன்றியமான எம்மால் அதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

பல்கலைக்கழகத்தில் இன்றைய பாடநேர அட்டவணைகள் அனைத்தும் தயாரிக்கப்பட்டுள்ளன. பாடங்கள் உரிய நேர அட்டவணையின்படி ஒழுங்காக நடைபெறும். பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் வழமை போல கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள் - என்றுள்ளது.

அதேவேளை, தனியொரு அரசியல் கட்சியால் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு பொது ஸ்தாபனமாக செயற்படும் நாம் ஆதரவை வழங்கி பகிரங்க அறிவிப்பு வெளியிடமுடியாது எனவும், வர்த்தகர்களின் தீர்மானத்தின் அடிப்படையில் இன்று வழமை போன்று வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் நெல்லியடி வர்த்தக சங்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-27-66-100)

## இன்றும்...

களில் எந்த மாற்றமும் இருக்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சி ஒன்றால் இன்று மாகாண ரீதியான ஹர்த்தால் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஆயினும் ஹர்த்தால் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் காணப்பட்ட குளறுபடிகளால் பல தரப்புகள் ஹர்த்தால் போராட்ட அழைப்பை நிராகரித்திருந்தன.


இந்தநிலையில், இன்று அரச மற்றும் தனியார் பஸ் சேவைகள் வழமைபோன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பிராந்திய கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையத்தின் தலைவர் பொ.கெங்காதரன் இது தொடர்பில் தெரிவித்தபோது, ஹர்த்தால் போராட்டம் தொடர்பில் இரு தினங்களுக்கு முன்னர் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. போராட்டம் தொடர்பாக எம்முடன் கலந்துரையாடப்படவில்லை. இது தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்குப் போதியளவு கால அவகாசம் கிட்டவில்லை. அந்தக் கடிதம் தொடர்பில் பஸ் சங்கங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. திங்கட்கிழமை (இன்று) வழமைபோன்று உள்ளூர் மற்றும் வெளிமாவட்ட பஸ் சேவைகள் இடம்பெறும் என்று தெரிவித்தார்.

அதேபோன்று இ.போ.ச. பஸ் சேவைகளும் வழமை போல் இன்று நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு
16 . 09 . 1936



இறப்பு
15 . 08 . 2025

**திரு.மாணிக்கம் கணபதிப்பிள்ளை**
(ஓய்வு பெற்ற நீர்ப்பாசன திணைக்களம்-பொறியிலாளர்)

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், நுணாவில், கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் கணபதிப்பிள்ளை அவர்கள் கடந்த (15.08.2025) வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம்-முத்தாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பண்டிதர் தம்பாபிள்ளை-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சொர்ணமலர் (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்பு கணவரும், சத்தியா தேவபாலன் (U.K), ஜங்கரன் (U.S.A) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.சுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவயோகம் மற்றும் சிவஞானம் காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் கமலாதேவி, கொங்காதரராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேவபாலன், தாட்சாயிணி ஆகியோரின் அன்பு மாமனாரும், நிதிபன்சாயி, அரன்சாயி, இனியாள்வாணி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் இன்று (18.08.2025) திங்கட்கிழமை பிற்பகல் 01.00 மணி முதல் பிற்பகல் 09.00 மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 19.08.2025 செவ்வாய்க்கிழமை அன்று மு.ப 11.00 மணிக்கு இறுதிக்கிரியை நடைபெற்று பி.ப 1.00 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
076 556 6060, 077 668 8558
070 243 8506

தகவல்:
பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய இறுதி ஆடிச்செவ்வாயின் மாலை உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை பக்தி பூர்வமாக நடைபெற்றது. மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட தண்டிகையில் நூற்றுக் கணக்கான அடியவர்கள் புடைசூழ அம்பாள் வெளிவீதி உலாவந்தார். (ச-25,66)

# பாதுகாப்பற்ற நிலையில் நான்காயிரம் சிறுவர்கள்!

அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு



**கொழும்பு, ஒக.18**
**நாட்டில் 4 ஆயிரம் சிறுவர்கள் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பது பொலிஸாரால் கண்டறியப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.**

அண்மையில் நடைபெற்ற மட்டக் களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட அவர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், தாய் அல்லது தந்தை வெளிநாடு சென்றுள்ளமை அல்லது சிறுவர் களை விட்டுவிட்டு தாய் அல்லது தந்தை வேறு திருமணம் செய்துள் ளமை அல்லது போதைபொருள் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு சிறையில் இருப்பது போன்ற கார ணங்களால் தாய், தந்தை இல் லாது மட்டக்களப்பில் 700 சிறுவர் கள் பாதுகாப்பற்றநிலையில் உள் ளனர்.
நாடு முழுவதும் 4 ஆயிரம் சிறுவர் கள் பாதுகாப்பற்ற நிலையில் உள் ளனர்.
இந்தக் குழந்தைகளுக்கு அன்பு, பராமரிப்பு, ஆதரவை வழங்குவதற் கும் அவர்களின் கல்வியை பல் வேறு வழியில் தொடர்வதை உறுதி செய்வதற்கும் திட்டங்கள் உருவாக் கப்படவேண்டும் - என்றார். (எ-இ)

## பயன்பாடற்ற காணிக்கு 2 வீத வரி அறவிடப்படும்

பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை அமர்வில் தீர்மானம்

கிளிநொச்சி, ஒக.18
பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைக்கு உட்பட்ட பயன் படுத்தப்படாத நிலங்களுக்கு 2 வீத வரி அறவிடுவது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு உபதவிசாளர் தலைமையில் கடந்த செவ் வாய்க்கிழமை நடைபெற்றபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.
அதற்கமைய குறித்த தீர்மானம் மக்களுக்கு ஒலி பெருக்கிமூலம் அறிவித்து உடனடியாகச் செயற்படுத் தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ச-25,113)

## சக்கர நாற்காலி வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், ஒக.18
யாழ். வட்டுக்கோட்டை பத்யங்கீரா அறக்கட்டளையினரால், கிளிநொச்சி பாரதிபுரத்தில் வசிக்கும் மாரிமுத்து இராமாயி மற்றும் பெண் நகரில் வசிக்கும் கதிர்காமத்தம்பி நமசிவா யம் ஆகியோருக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.
அவுஸ்ரேலியாவில் வசிக்கும் நிருத்த குமார் குடும்பத்தினர் இதற்கு நிதிப் பங்களிப்புச் செய்திருந்த னர். (ச-25, 63)

## கொலைக் கலாசாரத்தை நிறுத்த நடவடிக்கை தேவை

காவிந்த எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஒக.18
பாதாளக்குழுக்களை ஒடுக்குவதற்குரிய அரசியல் தலைமைத்துவத்தை உரியவகையில் அரசாங்கம் வழங்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித் துள்ளார்.
கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இதுதொடர்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு கொலைக் கலாசாரம் கோலோச்சியுள்ளது. இதனைத் தடுப்பதற்குரிய அரசியல் தலைமைத் துவத்தை அரசாங்கம் வழங்கவேண்டும். தேசிய பாதுகாப்புத் தொடர் பில் பாடமெடுக்கப்படும் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டார். ஆனால் நாட்டின் நிலைமை இன்று எவ்வாறு உள்ளது?
எனவே சுயாதீன விசாரணைக்கு இடமளித்து பிரதி அமைச்சர் பதவி விலகவேண்டும்- என்றார். (ச-44)



தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவி ருத்தி அலகின் ஏற்பாட்டில் பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்து வெளியேறிய இளைஞர், யுவதி களுக்கான 'தொழில் திறவுகோல்' பயிற்சி வழிகாட் டல் கருத்தரங்கு எழுதுமட்டுவாழ் வடக்குக் கிராம பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. (ச-25,9)



## பாதீனியம் ஒழிப்பு

யாழ்ப்பாணம், ஒக.18
ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளர் பிரிவின் சின்னமடுக் கிராமத் தில் பிரதேச செயலாளர் ஈ.தயாருபனின் வழிகாட்டலில் பிரதேச செய லக விவசாயப் பிரிவினால் பாதீனியம் ஒழிப்பு வேலைத்திட்டம் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.
இதன்போது சின்னமடுமாதா ஆலயத்திற்கு சமீபமாக வீதியோரமாகவும் காணிகளுக்குள்ளேயும் வளர்ந்திருந்த பாதீனியச் செடிகள் பிடுங்கி எரியூட்டி அழிக்கப்பட்டன.
ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளிக்கிழமை தோறும் பாதீனிய ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுவரு கின்றமை குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோ கத்தர்கள், பிரதேசத்திலுள்ள இளைஞர், யுவதிகள் ஆகியோர் பங்கு பற்றினர். (ச-41)

## செல்வச்சந்நிதி தேர்த்திருவிழாவையொட்டி குருதிக்கொடை முகாம்



யாழ்ப்பாணம், ஒக.18
வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயப் பெருவிழா வின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வல் வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தின் ஏற் பாட்டில் முதன்முறையாக மாபெரும் குரு திக்கொடை முகாம் நிகழ்வு ஏற்பாடுசெய்யப் பட்டுள்ளது.
தேர்த்திருவிழா நாளான எதிர்வரும் செப்ரெம் பர் மாதம் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 3 மணிவரை ஆலயச்சூழலில் அமைந்துள்ள சுகாதாரப் பணிமனை அலுவலகத் தில் இந்நிகழ்வு இடம் பெறும். நிகழ்வில் தன் னார்வக் குருதிக்கொடை யாளர்கள், ஆர்வலர்கள் கலந்துகொண்டு குருதிக்கொடைவழங்கி உயிர்காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், குருதிக்கொடை வழங்குநர்கள் 0779911131 எனும் தொலை பேசி இலக்கத்துடன் அழைப்பை ஏற்படுத்தி முன்பதிவுகளை மேற்கொள்ளுமாறும் குரு திக்கொடை முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு...

இந்தத் திருட்டுச் சம்பவம் நேற்றுமுன் தினம் நடந்துள்ளது. வீட்டில் ஆள்களற்ற நேரத்தில் நுழைந்த திருடர்கள் தொலைக் காட்சி உட்பட்ட பல பொருள்களைத் திருடிச் சென்றனர் என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய போதைப் பொருள் மற்றும் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் உபபரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினர் முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்திருந்தநிலையில், நேற்று இரவு இரு சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளனர். குடத்தனை - பொற்பதிப் பகுதியில் வீடொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த திருடப்பட்ட பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்கள் 24 மற்றும் 28 வயதுகளை உடையவர்கள் என்றும், சந்தேகநபர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-20)

## இலங்கையை...

இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

அடுத்த மாதம் ஜெனிவாவில் நடக்கவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரை முன்னிறுத்தி இந்த அறிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்த அறிக்கை, இலங்கையின் மனித உரிமைகள் நிலை தொடர்பாக ஒரு கவலைக்குரிய சித்திரத்தை முன்வைப்பதுடன், சர்வதேச சமூகம் ஏன் இலங்கை விடயத்தில் தனது கண்காணிப்பைத் தளர்த்தக்கூடாது என்பதற்கான ஓர் எச்சரிக்கை மணியாகவும் உள்ளது.

ஐ.நா. அறிக்கை குறிப்பிடும் கட்டமைப்பு ரீதியான காரணிகள் தற்காலிகப் பிரச்சினைகள் அல்ல. அவை நாட்டின் நிர்வாக, சட்ட மற்றும் பாதுகாப்பு இயந்திரங்களில் ஆழமாக வேரூன்றியுள்ள நீண்டகாலப் பிரச்சினைகளாகும். சர்வதேசக் கண்டனங்கள் இருந்தபோதும், தன்னிச்சையான கைதுகளுக்கும், சித்திரவதைகளுக்கும் வழிவகுக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் இன்னும் முழுமையாக நீக்கப்படவில்லை.

போர்க்குற்றங்கள் மற்றும் பெரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவ மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மீது நம்பகரமான விசாரணைகள் இன்றி, அவர்கள் தொடர்ந்தும் பதவிகளில் நீட்டிக்கப்பட்டுள்ளனர். கடந்தகால மீறல்களுக்குப் பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்துவதற்கான முயற்சிகள் இல்லாமை மற்றும் உள்நாட்டு நீதிப் பொறிமுறைகள் தோல்வியடைந்தமை என்பன சர்வதேசத்தின் தலையீட்டை வலியுறுத்துகிறன.

ஐ.நா. ஆணையாளரின் பொறுப்புக்கூறல் செயற்திட்டம் என்பது, இலங்கையில் இடம்பெற்றன என்று கூறப்படும் பெரும் மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைச் சேகரித்து, பாதுகாத்து, பகுப்பாய்வு செய்யும் ஒரு சர்வதேசப் பொறிமுறையாகும். இலங்கை இத்தகைய சர்வதேசப் பொறிமுறைகளைத் தொடர்ச்சியாக நிராகரித்து, நாட்டின் இறைமையில் தலையிடுவதாகக் குற்றம் சுமத்துகிறது.

எதிர்வரும் ஜெனிவாக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான ஒரு புதிய தீர்மானத்தின் மூலம் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை மேலும் வலுப்படுத்தவும், அதன் ஆயுள்காலத்தை நீடிக்கவும் சர்வதேச சமூகம் முன்வரவேண்டும் என்ற கோரிக்கையை இந்த அறிக்கை வலுப்படுத்துகிறது. இலங்கையின் கட்டமைப்பு மாறாத வரை, சர்வதேசத்தின் கண்காணிப்பும் தளரக்கூடாது - என்றார். (அ-எ-இ)

## பயங்கரவாதத்...

மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டம் உருவாக்கப்பட்டதே எமது கட்சியின் அரசியல் எழுச்சியைத் தடை செய்ய வேண்டும் என்பதற்காகவே. இந்தச் சட்டம் தொடர்பாக நாம் நன்கு அறிந்துள்ளோம். அதனால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதே எமது நிலைப்பாடு - என்றார்.

முல்லைத்தீவில் ஊடகவியலாளர் ஒருவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அமைச்சரிடம் கேட்ட போது, அது தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்று பதிலளித்தார். (அ-எ-214-113)

## ஓமந்தையில்...

சேர்க்கப்பட்டுள்ளனர். கண்டியிலிருந்து முல்லைத்தீவு, விசுவமடு நோக்கிப் பயணித்த கப் ரக வாகனம் ஓமந்தை- மாணிக்கர் வளவுப்பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து பாரவூர்தி ஒன்றுடன் மோதித் தடம்புரண்டது. அதில் பயணித்த பெண்கள், சிறுவர்கள் உட்பட 15க்கும் மேற்பட்டோர் வீதியில் தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்தனர்.

வீதியால் பயணித்த பொதுமக்களின் உதவியுடன் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். சம்பவ இடத்திலேயே பெண் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர். 13 பேர் காயமடைந்துள்ள நிலையில், அவர்களில் 5 பேர் சிறுவர்கள் என்றும் 8 பேர் பெண்கள் என்றும் மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

வாகனத்தில் பயணித்த அனைவரும் உறவினர்கள் என்றும், கண்டியில் நடைபெற்ற மரண வீடு ஒன்றுக்குச் சென்றுவிட்டு மீண்டும் விசுவமடு நோக்கிப் பயணித்தபோதே விபத்தில் சிக்கினர் என்றும் தெரியவருகின்றது.

அதேவேளை, விபத்தில் சிக்கிய சிறுவன் உட்பட மூவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக ஓமந்தைப்பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-110)

## அத்துமீறியோருடன்...

அரசாங்கம் மற்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"சம்பவம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பொலிஸின் இரு குழுக்கள் விசாரணைகளை நடத்திவருகின்றன. 13 இராணுவத்தினரிடம் வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. மக்களிடமும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது" என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப். யூ. வூட்லர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகசந்திப்பின்போது எழுப்பப்பட்ட கேள்விகளும், அதற்கு பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மற்றும் அமைச்சரவைப் பேச்சாளர் ஆகியோர் வழங்கிய பதில்களும் பின்வருமாறு

**கேள்வி** - மூன்று இராணுவத்தினர் எப்போது கைதுசெய்யப்பட்டனர்? இவர்களுக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டு என்ன?

**பொலிஸ் ஊடகப்பேச்சாளர்** - கைதுசெய்யப்பட்டுள்ள மூவரில் இருவர் களவுக்கு ஒத்துழைப்பு வழங்கினர் எனக் குற்றச்சாட்டு உள்ளது. மற்றையவர் தாக்குதல் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதிவரை மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

**கேள்வி** - இராணுவ முகாமில் இருந்தவர்களுடன் அத்துமீறி நுழைந்தனர் எனக் கூறப்படும் தரப்பினருக்கு தொடர்பு இருந்துள்ளதா?

**பொலிஸ் ஊடகப்பேச்சாளர்** - மக்களிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையில் தாக்குதல் நடத்தினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். எதிர்வரும் 19 ஆம் திகதி இவர் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்படவுள்ளார்.

**கேள்வி** - சிப்பாய் ஒருவர் மட்டுமா தாக்குதலுடன் தொடர்புபட்டுள்ளார் எனச் சந்தேகிக்கப்படுகின்றார்?

**பொலிஸ் ஊடகப்பேச்சாளர்** - ஆம்.

**கேள்வி** - ஏனைய இருவர், அதாவது முகாமுக்குள் நுழைய முற்பட்ட ஐவருடன் இவர்களுக்கு தொடர்பு இருந்துள்ளதா?

**பொலிஸ் ஊடகப்பேச்சாளர்** - தொடர்புள்ளதா என்பது தொடர்பாக விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்துவதற்காகத்தான் கைது இடம்பெற்றுள்ளது.

**கேள்வி** - சம்பவம் தொடர்பில் இராணுவம் மற்றும் பொலிஸ் தரப்பில் இருந்து மாறுபட்ட கருத்துகள் வெளிவருகின்றன. அத்துமீறி நுழைந்தனர் என இராணுவம் கூறுகின்றது, உள்ளே இருந்தவர்களுடன் தொடர்பு இருந்தது என பொலிஸ் தரப்புக் கூறுகின்றது. அத்துமீறி நுழைந்தனர் எனக் கூறப்படுபவர்களுக்கு உள்ளே இருந்தவர்களுடன் தொடர்பு இருந்துள்ளது என்றுதானே தெரியவருகின்றது.?

**அமைச்சரவைப் பேச்சாளர்** - பொலிஸ் ஊடகப் பேச்சாளர், இராணுவப் பேச்சாளர் ஆகியோர் வெளியிட்ட கருத்துகளில் பரஸ்பர முரண்பாடு இல்லை. இராணுவ முகாமுக்குள் அத்துமீறி நுழைந்துள்ளனர். அழைப்பு விடுத்துத்தான் வந்தனரெனில் இரவு 11 மணிக்கு நுழைய வேண்டியதில்லையே?

இதற்கு இராணுவ முகாமில் இருந்த ஒருவர் அல்லது சிலரின் ஒத்துழைப்புக் கிடைத்துள்ளது என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. இராணுவ முகாமில் இருந்த 25 பேரில் ஓரிருவருக்கு உள் நுழைவு சம்பவத்துடன் தொடர்புள்ளது என்பது இராணுவம் அனுமதி வழங்கியது என அர்த்தப்படாது. எனவே, இது சட்டவிரோத உள்நுழைவாகும்.

சம்பவம் ஒகஸ்ட் மாதம் 7ஆம் திகதிதான் இடம்பெற்றது. சிப்பாய்கள் மூவர் 9 ஆம் திகதி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இந்தவிடயத்தில் தாமதம் எதுவும் இல்லை.

**கேள்வி** - ஒருவரை மட்டும் இராணுவத்தினர் பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர். பொலிஸாரிடம் ஒப்படைக்காமல் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது ஏன்? ஏனையோர் பொலிஸாரிடம் சரணடைந்தனரா? பொலிஸார் கைதுசெய்தனரா?

**அமைச்சரவைப் பேச்சாளர்** - இராணுவம் கைதுசெய்யவில்லை. பிடித்து வீட்டாரிடம் ஒப்படைத்துள்ளனர். பொலிஸ் விசாரணையின் அடிப்படையில் 'பி' அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி** - கைதுசெய்யப்பட்ட நபர் யாரைத் தாக்கியுள்ளார்? உயிரிழந்த நபரையா அல்லது வேறு நபர்களையா?

**அமைச்சரவைப் பேச்சாளர்** வீட்டாரிடம் ஒப்படைக்கப்பட்ட நபர்மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

**கேள்வி** - அப்படியானால் அவர் தாக்கப்பட்டா ஒப்படைக்கப்பட்டுள்ளார்?

**அமைச்சரவைப் பேச்சாளர்** - ஒப்படைக்கப்பட்ட நபர் தாக்கப்பட்டார் என குற்றச்சாட்டு எழுந்துள்ளதால்தான் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-எ-44)

## பொலிஸ்...

துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்ட நபர், இதற்கு முன்னரும் அதே இராணுவ முகாமுக்குள் கடந்த ஜனவரி 18ஆம் திகதி அத்துமீறி நுழைந்துள்ளார். பொருள்களை களவாட முற்பட்டமை தொடர்பில் அவருக்கு எதிராக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்தப்பின்புலத்திலேயே அவர் மீண்டும் அத்துமீறி நுழைந்துள்ளார்.

இராணுவ முகாமுக்குள் அத்துமீறி நுழைந்து தப்பியோடிய குழுவில் இருந்த ஒருவரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்பது சம்பவம் நடைபெற்று மறுநாளே எமக்குத் தெரியவந்தது. அவரின் மரணத்துக்கு இராணுவம் காரணமில்லை என இராணுவத் தரப்பின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்தது.

நாம் ஒருதலைப்பட்சமாக விசாரணை நடத்தவில்லை. பொலிஸாரால் முன்னெடுக்கப்படும் விசாரணைக்கும் ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. எதிர்காலத்திலும் வழங்கப்படும் - என்றார். (அ-எ-44)

## பாடசாலைகள்...

தவணை கடந்த 7ஆம் திகதி நிறைவடைந்தது. இந்தப் பாடசாலைகளின் மூன்றாம் தவணைக் கற்றல் நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதேவேளை, முஸ்லிம் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதனவரி அறவிடுவதற்கு காணிகளை எல்லைப்படுத்துக

*வேலணைப் பிரதேசசபை அறிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 18

வேலணை தெற்குக் கிராம அலுவலர் பிரிவு ஜே/17 இல் ஆதன வரி அறவிடல் செயற்பாடுகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதற்கமைய, குறித்த பகுதியில் வாழும் காணி உரிமையாளர்கள் தமது காணி தொடர்பான பொருத்தமான ஆவணங்களைத் தயார்நிலையில் வைத்திருப்பதுடன் காணிகளைத் துப்புரவுசெய்து எல்லைப்படுத்துமாறும் வேலணைப் பிரதேச சபையின் தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் கேட்டுக் கொண்டுள்ளார். (ச-66)

## கொக்கிளாய் - புல்மோட்டை

# இணைப்புப்பாலத்தை அமைக்க பட்ஜெட்டில் நிதி ஒதுக்குங்கள்!

*ஜனாதிபதியிடம் ரவிகரன் எம்.பி. கோரிக்கை*

**முல்லைத்தீவு, ஓக.18**

**முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாயையும், திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டையையும் இணைக்கும் பாலத்தை அமைக்குமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

ஜனாதிபதி செயலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் அவர் இந்தக் கோரிக்கையை ஜனாதிபதியிடம் முன்வைத்தார்.

இந்தப் பாலம் அமைக்கப்பட்டால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான போக்குவரத்து இலகுவாக்கப்படும். சுற்றுலாத்துறையும் மேம்படும்.

எனவே முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் செயற்பாட்டுக்கு வரவு- செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் ரவிகரன் எம்.பி. குறிப்பிட்டார்.

குறித்த கோரிக்கை நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் உறுதியளித்தார். (ச-246)

## கெடுபிடிகளுக்கு எதிராக பொதுமுடக்கத்துக்கு ஆதரவு

*வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் தெரிவிப்பு*

நாளை திங்கட்கிழமை கடைப்பிடிக்கப்படவுள்ள பொதுமுடக்கத்துக்கு வடக்கு- கிழக்கு மக்கள் பூரண ஆதரவினை வழங்க வேண்டும் என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் செ.மயூரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

போர் முடிவுற்று 16வருடங்கள் கடந்தபோதும் வடக்கு- கிழக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்படவில்லை. அவர்களின் பிரசன்னமும் குறைக்கப்படவில்லை. மாறாக பொதுமக்களின் காணிகளைக் கபளீகரம் செய்தவர்கள் அங்கு நிலையான இராணுவக் கட்டுமானங்களை அமைத்தனர். அந்தக்காலம் தொட்டுத் தமிழ்மக்களின் அன்றாடவாழ்வில் இராணுவத்தின் தலையீடனாது பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றது. அவ்வாறான ஒரு சம்பவமே கடந்தவாரம் முல்லைத்தீவு முத்துஐயன்கட்டுப் பகுதியிலும் இடம்பெற்றது. அந்த வகையில் தமிழர்தாயகப் பகுதிகளில் இடம்பெறும் அதிகாரவர்க்கத்தின் எதேச்சயதிகாரப் போக்குக்கு எதிராக நாளை திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ள பொதுமுடக்கத்துக்கு வடக்கு-கிழக்குத் தமிழ்மக்கள், தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்கி சர்வதேச சமூகத்துக்கும், அரசுக்கும் எமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-110)



## ‘கிளீன் ஸ்ரீலங்கா’ ஊடகவியலாளருக்கான விழிப்புணர்வுச் செயமலர்வு

கொழும்பு, ஓக. 18

ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கமைய முன்னெடுக்கப்பட்டுவரும் தூய்மையான இலங்கை செயற்றிட்டத்தின் முதலாவது விழிப்புணர்வுக்கான செயற்றிட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டநிலையில் கடந்த வியாழக்கிழமை யாழ். மாவட்ட ஊடகவியலாளர்களுடனான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாணம் கைதடியில் இடம்பெற்றது.

வடக்கு மாகாணசபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செயலமர்வை மாகாணசபையின் பிரதம செயலாளர் திருமதி தனுஜா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து கிளீன் ஸ்ரீலங்கா பணிப்பாளர் செயலணியின் பிரதிநிதியும் ஜனாதிபதியின் உதவிச் செயலாளருமான மனோகரன் சாரதாஞ்சலி வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார். ‘இதயபூர்வமான யாழ்ப்பாணத்துக்கு ஒற்றுமையின் தூய்மையான நெடும்பயணம்’ எனும் கருப்பொருளிலான செயற்றிட்டத்தினை முன்னெடுக்கும் வகையில் இந்தச் செயலணியின் குழு யாழ்ப்பாணம் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-20,100)

**உதவித்திட்டம்**



மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டி எழுப்பும் திட்டத்தின்கீழ், விழுது ஆற்றல் மேம்பாட்டுமையத்தின் ஊடாக முதற்கட்டமாக மாந்தை மேற்குப் பிரதேசச் செயலாளர் பிரிவில் தாமரைக் குளத்தில் மீன் குஞ்சுகள் விடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் மாந்தை மேற்குப் பிரதேச செயலக அதிகாரிகள், கிராம அலுவலர்கள் உள்ளடங்களாக அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (ச- 25, 56)

# ஆதனவரியில் மாற்றம் இவ்வருடத்தில் இல்லை

*வவுனியா மாநகரசபை தீர்மானம்*

வவுனியா, ஓக.18

மாநகரசபையின் ஆதனவரி அறவீட்டில் எந்தவிதமான மாற்றமும் செய்யப்படாமல் 8:10 என்ற அடிப்படையில் அறவிடப்படும் என்று வவுனியா மாநகரசபை விசேட அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த அமர்வில் சபையால் தீர்மானிக்கப்பட்டுள்ள ஆதனவரியைக் குறைக்குமாறு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர். இதனால் அந்த அமர்வில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் அதுதொடர்பாக ஆராய்வதற்கு விசேட அமர்வு ஒன்று நடத்தப்படும் என முதல்வர் தெரிவித்திருந்தார். அதற்கமைய வவுனியா மாநகர சபையின் ஆதனவரி தொடர்பான விசேட அமர்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இதில் குழுநிலை விவாதத்தில் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஆதனவரியைக் குறைக்கவேண்டும். மக்கள்மீது வரிச்சுமையை ஏற்படுத்தக்கூடாது என்ற கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

எனினும் மாநகரசபையில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமை, ஊழியர்களின் சம்பளம் போன்றவற்றைச் சுட்டிக்காட்டி ஆதனவரியை குடியிருப்புகளுக்கு 8வீதமாகவும், வர்த்தக நிலையங்களுக்கு 10 வீதமாகவும் அறவிடவேண்டிய தேவை இருப்பதாக ஆளுந்தரப்பு உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து 8:10 என்ற அடிப்படையிலேயே ஆதனவரியை அறவிடுவதுடன் அதில் மாற்றத்தை செய்யமுடியுமா என்பதை அடுத்தவருடம் ஆராயலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. (ச-110)

## விபத்துகளைத் தடுப்போம் யாழில் துண்டுப்பிரசுரம்

முல்லைத்தீவு, ஓக.18

வீதி விபத்துகளைத் தடுக்கும் நோக்கில் விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்கள் அண்மையில் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் வழங்கப்பட்டன. சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய பணி அமைப்பால் இந்த விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. யாழ் . மாவட்டப் பணிப்பாளர்கள், இணைப்பாளர்கள். இணைந்து இந்த இந்த விழிப்பு ணர்வில் ஈடுபட்டனர். (ச-இ)





## காணி தேவை

யாழ்ப்பாணம் வடமராட்சி மற்றும் கோப்பாய் பகுதிகளில் 10 பரப்பிற்கு மேற்பட்ட காணி தேவை. உரிமையாளர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

076 739 0413



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.08. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.